அனுப்புநர்

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
இணையவழி குற்றப்பிரிவு,
வேலூர்.

பெறுநர்

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

---

C.No. 35/ADSP/CCW/2026, Dated: 04.06.2026

ஐயா,

பொருள்: காவல் - சைபர்கிரைம் காவல் நிலையம் – சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு - பள்ளி மாணவர்கள்/மாணவர்களின் பெற்றோரிடம் கல்வி உதவித்தொகை தருவதாக கூறி ஏமாற்றி பணம் பறிப்பது - விழிப்புணர்வு சுற்றறிக்கை அனுப்புவது சார்பாக.

-------

வேலூர் மாவட்டத்தில் பரவலாக உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவ / மாணவிகளின் பெற்றோர்களுக்கு (SSLC/HSc) பள்ளி கல்வித்துறை மூலமாக அரசு அலுவலர்கள் பேசுவதாகவும் உயர்நிலை/மேல்நிலை வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை குறிப்பிட்ட பள்ளியில் படிக்கும் மாணவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதனை பெற்றுக்கொள்ள போன்பே (Phone Pe) மூலமாக சிறிய தொகையை 2000/- முதல் 5,000/- வரை முன்தொகையாக G.Pay அல்லது போன்பே மூலமாக பதிவு செய்து கட்ட வைத்து அல்லது க்யூஆர்.கோடை (Qr-code)-ஐ ஸ்கேன் செய்ய சொல்லி ஏமாற்றி பணம்பறிக்கும் நிகழ்வுகள் தற்பொழுது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே உள்ளது.

2. இது சம்மந்தமாக வேலூர் மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் மனுக்கள் அதிகப்படியாக பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, இது குறித்து Scholarship –மோசடி சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு “சைபர் கிரைம் விழிப்புணர்வு” ஏற்படுத்தும் விதமாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள்

அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி மாணவர்கள் /மாணவர்களின் பெற்றோர்கள் யாரும் ஸ்காலர்ஷிப் (Scholarship) என்ற பெயரில் நடைபெறும் ஏமாற்று வேலையில் செல்போன் மூலமாகவோ (WhatsAPP) வாட்ஸ்ஆப் மூலமாகவோ யாரேனும் தொடர்பு கொண்டு பள்ளி கல்வித்துறையிலிருந்து அரசு அதிகாரிகள் பேசுவதாக கூறி பணம் கேட்டால் ஏமார்ந்துவிடாமல் சம்மந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்கள்/தலைமை ஆசிரியர்களிடம் கலந்துபேசி **உண்மைத்தன்மையை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. மேலே சொன்னவாறு யாரேனும் ஏமார்ந்து இருந்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திலேயோ, அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கும் சைபர் கிரைம் காவல் நிலையத்திலோ, அல்லது** 1930 (or) (Web://cybercrime.gov.in) **என்ற ஆன்லைன் புகார் எண்ணில் தொடர்பு கொண்டு புகார் அளிக்கும் படி** கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

4/6/26

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
இணையவழி குற்றப்பிரிவு,
வேலூர் மாவட்டம்.

நகல்: காவல் கண்காணிப்பாளர், வேலூர் மாவட்டம், வேலூர்.